2024 ஜூன் 25]
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அதேநேரத்தில் கூட்டுறவு வங்கிகளுடைய சேவை குறிப்பாக, கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள், பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் இருக்கக்கூடியவர்களின் பயன்பாட்டிற்கு மிகவும் அவசியம். ஆனால், கடந்த பல காலங்களாக இந்தக் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு புதிய கிளைகள் எதுவும் தொடங்கப்படவில்லை.

தமிழகத்தில் ஏறத்தாழ 180 வங்கிகள், LD bank (Land Development Bank)-நில வள வங்கி என்று அழைக்கப்பட்ட அந்த வங்கிகளுக்கு, இடைக்காலத்தில் அதன் நிதியாதாரங்கள் குறைந்தது. மேலும் இந்த வங்கிகளுக்கு, NABARD (National Bank for Agriculture and Rural Development) போன்ற அமைப்புகள் குறைந்த வட்டியில் கடன் தருவதை நிறுத்திவிட்ட காரணத்தால், இடைப்பட்ட காலத்தில் அந்த வங்கிகள் தொடர்ந்து ஆரோக்கியமாகச் செயல்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலை இருந்தது. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முதற்கட்டமாக அந்த 180 வங்கிகளுக்கும் புத்துயிர் ஊட்டி, ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று முனைப்போடு செயல்பட்டு வருகிறோம். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்துள்ளோம். LD bank-ஐ தவிர்த்து, 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இருக்கின்றன. மேலும், ஒன்று, இரண்டு தேவைப்பட்டால் தொடங்கலாம். அதைப்போல, நகர்ப்புர வங்கிகள் இருக்கின்றன. அவற்றினுடைய கிளைகளையும் துவக்கலாம். ஆகவே, LD bank-ஐ தற்போது திறப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. தேவைப்படின், புதிய வங்கிகள் அதாவது, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடங்கப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிறைவேற்றி தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கொடுக்கமாட்டேன் என்பதற்கு இவ்வளவு விளக்கங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 85 மற்றும் 86 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**87—**

## ஒருங்கிணைந்த அவசிய ஆய்வகச் சேவை

***153321—திரு. ஈ. ராஜா:**

*மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*"ஒருங்கிணைந்த அவசிய ஆய்வகச் சேவை" எனும் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு புதிய சிறப்புக்குரிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் தேதி, கன்னியாகுமரி மாவட்டம், தொல்லவிளை என்ற பகுதியில் இருக்கிற நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் "மக்களைத் தேடி ஆய்வகச் சேவை" என்ற* hub-and-spoke *திட்டத்தின்கீழ் நோயாளிகளின் ஆய்வகப் பரிசோதனை மாதிரிகள் கீழ்நிலை ஆய்வகங்களிலிருந்து உயர்நிலை ஆய்வகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, நோயாளிகளின் தேவையற்ற அலைச்சல் தவிர்க்கப்படுகிற வகையில் இந்தத் திட்டம்*

2024 ஜூன் 25]

செயல்படுத்தப்பட்டது. இதற்குமுன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இரண்டாம் நிலை சுகாதார நிலையங்களில் நடத்தப்படாத உயர்நிலைப் பரிசோதனைகளை—எடுத்துக்காட்டாக thyroid, நீரிழிவு நோய்க்கான HbA1c—நோயாளிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலோ அல்லது தனியார் மருத்துவமனைகளிலோ பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தின்மூலம் spoke நிலை ஆய்வகங்களான அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட ஆய்வக மாதிரிகள், உயர்நிலை ஆய்வகங்களான அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிசோதனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால், நோயாளிகளின் வீண் பயணமும் மற்றும் மக்களின் நோய் கண்டறிதலுக்கான ஆய்வகப் பரிசோதனைகளுக்கான செலவினமும் குறைக்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் முழு இரத்தக் கூறுகள் எண்ணிக்கை போன்ற அடிப்படை பரிசோதனைகள் முதல் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரி நுண்ணுயிரி சோதனை மற்றும் சிறுநீர் உணர்வுதிறன் பரிசோதனை, ஹார்மோன் பரிசோதனை, திசு பரிசோதனை போன்ற மேம்பட்ட பரிசோதனைகள் வரை உயர்நிலை ஆய்வகங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்பரிசோதனைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.150/– முதல் ரூ.3,000/– வரை செலவிடப்படுகின்றன. முழு இரத்தக் கூறுகள் எண்ணிக்கை பரிசோதனைமூலம் இரத்த சிவப்பு அணுக்கள், hemoglobin மற்றும் hematocrit ஆகியவற்றின் அளவை அளவிட முடிகிறது. இதன்மூலம் பல்வேறு வகையான இரத்த சோகைகள் கண்டறியப்பட்டு, உயர் சிகிச்சை அளிப்பதன்மூலம் இரத்த சோகை இல்லா தமிழகம் உருவாகுவதற்கு இத்திட்டம் உதவுகிறது. இப்படி பல்வேறு அம்சங்களுடன்கூடிய இந்தத் திட்டமானது கடந்த பிப்ரவரித் திங்கள் 5 ஆம் தேதி தொல்லவிளையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.

**திரு. ஈ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும்

திராவிட மாடல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களைத்தேடி ஆய்வகச் சேவைமூலம் பயனடைந்த பொதுமக்கள் எத்தனை பேர் மற்றும் அந்தத் திட்டத்தின் மூலமாக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் நிதி ஆதாரத்தின்கீழ், ஆய்வக வேதிப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களுக்கு 126 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. கூடுதலாக ஆய்வக நுகர்பொருட்களின் விநியோக நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், Passbook அமைப்பு செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு சுகாதார அலகு, மாவட்ட நிலை, மாவட்ட தலைமை மருத்துவமனை நிலை, மாவட்டக் கல்லூரி மருத்துவமனை நிலை என்ற கணக்கில் 118 Walk-in குளிரூட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் செயல்பாட்டைச் செயலி ஒன்றின்மூலம் திறம்படக் கண்காணிக்கப்படுவது இச்சேவையின் மிகச் சிறப்பான அம்சமாகும். 2,427 spoke ஆய்வகங்கள், 755 hub எனப்படும் உயர்நிலை ஆய்வகங்களோடு இணைக்கப்பட்டு செயல்படும் இத்திட்டத்தில் 216 ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 5–2–2024 முதல் 22–6–2024 வரை 2 இலட்சத்து 57 ஆயிரத்து 493 ஆய்வகப் பரிசோதனைகள், 1,976 பணியாளர்களின் அர்ப்பணிப்புகளுடன்கூடிய சேவைமூலம் வெற்றிநடை போடுகிறது. இந்திய அளவில் சுகாதாரத் துறையின்கீழ் பணியாற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களைக்கொண்டு, இத்தகைய ஒரு திட்டத்தினைச் செயல்படுத்தும் ஒரே மாநிலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறும் தமிழகம் என்பதே பெருமைக்குரிய ஒன்று என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய விடையைக் காணிக்கையாக்குகிறேன்.